பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**20 12 2025 SATURDAY 7.15 PM**

ஆகாஷவாணி

# <u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியாவின் ஆன்மிக வழிகாட்டுதலின் மூலம் உலகளாவிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

2. அஸ்ஸாம் மாநிலம் குவஹாத்தி சர்வதேச விமான நிலையத்தின் புதிய முனையத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தொடங்கிவைத்தார்.

3. வரும் 2027-ஆம் ஆண்டுக்குள் இந்தியா உலகிலேயே மூன்றாவது மிகப்பெரிய பொருளாதார நாடாக உருவெடுக்கும் என்று மத்திய அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

4. பங்களாதேஷில் அனைத்துத்தரப்பினரும் அமைதி காக்க வேண்டும் என்று ஐ நா பொதுச்செயலாளர் திரு அன்டோனியோ குட்ரஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

5. பங்களாதேஷ் சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Meiraba Luwang** பட்டம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>>>

இந்தியாவின் ஆன்மிக வழிகாட்டுதலின் மூலம் உலகளாவிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

ஹைதராபாதில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், நமது நாட்டின் ஆன்மிக பாரம்பரியமும், நவீன வளர்ச்சியும் இணைந்து மனநலம் மற்றும் சுற்றுச்சூழல் சவால்கள் போன்ற உலகளாவிய பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியும் என்று கூறினார்.

மனிதகுல மேம்பாட்டிற்கு ஆன்மிக வளர்ச்சி மிகவும் முக்கியமானது என்று திருமதி திரௌபதி முர்மு தெரிவித்தார்.

<<<<<>>>>>>>

மேற்குவங்க மாநிலத்தில் **3** ஆயிரத்து **200** கோடி ரூபாய் மதிப்பில் இரண்டு தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று அடிக்கல் நாட்டினார்.

நாடியா மாவட்டத்தின் **Taherpur** என்ற இடத்தில் வளர்ச்சித் திட்டங்களை கொல்கத்தாவில் இருந்தபடியே தொலைபேசி வாயிலாக தொடங்கிவைத்து பேசிய பிரதமர், மேற்குவங்க மாநிலத்தில் திரிணமுல் காங்கிரஸ் தலைமையில் மோசமான ஆட்சி நடைபெற்று வருவதாக கூறினார்.

ஊழல், வாரிசு அரசியல் போன்றவற்றால் மாநிலத்தின் வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் மக்கள் பிஜேபிக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்றும், மாநிலத்திலும் பிஜேபி ஆட்சி இருந்தால்தான் வளர்ச்சியின் பயன்களை பெற முடியும் என்றும் அவர் கூறினார்.

மாநிலத்தில் உள்ள அனைத்து மக்களும் தங்களுக்கு ஆதரவு தெரிவிக்கிறார்கள் என்ற எண்ணத்தில் திரிணாமுல் காங்கிரஸ் அரசு செயல்பட்டு வருவதாகவும், இதனால் மாநிலத்தின் வளர்ச்சி தடைபடுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மாநிலத்தில் சட்டவிரோதமாக ஊடுருவியவர்களுக்கு வாக்குறுரிமையை உறுதி செய்யும் வகையில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளுக்கு செல்வி மம்தா பானர்ஜியின் கட்சி எதிர்ப்பு தெரிவிப்பதாகவும் திரு நரேந்திர மோடி கூறினார்.

கடுமையான மேகமூட்டம் காரணமாக பிரதமர் சென்ற ஹெலிகாப்டர் விழா நடக்கும் இடத்திற்கு செல்ல முடியாத காரணத்தால், கொல்கத்தாவில் இருந்து தொலைபேசி வாயிலாக இவ்விழாவில் திரு நரேந்திர மோடி பங்கேற்றார்.

<<<<<>>>>>>>

அஸ்ஸாம் மாநிலம் குவஹாத்தி சர்வதேச விமான நிலையத்தின் புதிய முனையத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தொடங்கிவைத்தார்.

இந்த முனையத்திற்கு வெளியே அமைக்கப்பட்டுள்ள அம்மாநில முன்னாள் முதலமைச்சர் **Gopinath Bardoloi**-யின் **80** அடி உயர சிலையையும் பிரதமர் திறந்துவைத்தார்.

குவஹாத்தியில் பொதுமக்களிடையே உரையாற்றிய பிரதமர், அஸ்ஸாம் மாநிலத்தின் வளர்ச்சியில் புதிய அத்தியாயம் தொடங்குவதன் விழாவை இன்று நாம் கொண்டாடுவதாக கூறினார்.

இந்த வளர்ச்சி அஸ்ஸாம் மட்டுமல்லாது, ஒட்டுமொத்த வடகிழக்கு மாநிலங்களுக்கும் பொதுவானது என்று குறிப்பிட்டார்.

மத்தியிலும் — மாநிலத்திலும் பிஜேபி ஆட்சியில் இருப்பதால், அஸ்ஸாம் மக்களுக்கான திட்டங்கள் தடையின்றி நிறைவேற்றப்பட்டு வருவதாக கூறினார்.

இரண்டு நாள் பயணமாக அஸ்ஸாம் மாநிலத்திற்கு சென்றுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி, இம்மாநிலத்தில் **15** ஆயிரத்து **600** கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களையும் தொடங்கிவைக்கிறார்.

<<<<<>>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான வெளியுறவுக் கொள்கை நீண்டகால லட்சிய நோக்குடன் அமையும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புனேயில் இன்று ஒரு நிகர்நிலை பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய அவர், உலக அளவில் இந்தியாவின் அந்தஸ்தை மேலும் வலுப்படுத்துவதற்கு பல நாடுகளுடன் நட்புறவு மற்றும் ஒத்துழைப்பை உருவாக்க வேண்டியது அவசியம் என்றும் குறிப்பிட்டார்.

இளைஞர்கள் குறிப்பாக மாணவர்கள் நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல வேண்டும் என்றும், அப்போதுதான் 2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தொழில்நுட்பம், மூலதனம், முதலீடு போன்ற விஷயங்களை உலக அளவில் தற்போது அழுத்தம் அதிகரித்திருப்பதாகவும் கூறிய அவர், இந்த சூழலில் இந்தியாவின் உற்பத்தித் திறனை பெரிய அளவில் மேம்படுத்துவதற்கும், அதிக தொழில்நுட்பங்களை கொண்டுவருவதற்கும் முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

எதிர்கால சவால்களை சமாளிக்கும் வகையில், நாட்டின் திறனை மேம்படுத்த வேண்டியது அவசியம் என்றும் திரு ஜெய்சங்கர் கூறினார்.

<<<<<>>>>>>>

வரும் 2027-ஆம் ஆண்டுக்குள் இந்தியா உலகிலேயே மூன்றாவது மிகப்பெரிய பொருளாதார நாடாக உருவெடுக்கும் என்று மத்திய அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலம் இந்தூரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு கொண்டுவந்துள்ள பொருளாதார கொள்கைகள் மூலம் நாடு வளர்ச்சியடைந்து வருவதாக தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரம் 12 ஆண்டுகளுக்கு முன்னர் 10-ஆவது இடத்தில் இருந்த நாட்டின் பொருளாதாரம் தற்போது நான்காவது இடத்தில் உள்ளதாகவும், இன்னும் இரண்டு ஆண்டுகளில் ஜெர்மனியை பின்னுக்கு தள்ளி, இந்தியா 3-ஆவது இடத்திற்கு முன்னேறும் என்றும் அவர் கூறினார்.

நாட்டின் பொருளாதாரம் தற்போது நான்கரை ட்ரில்லியன் டாலர் அளவுக்கு அதிகரித்துள்ளதாகவும் திரு ஜோதி ஆதித்ய சிந்தியா தெரிவித்தார்.

<<<<<>>>>>>>

பங்களாதேஷில் அனைத்துத்தரப்பினரும் அமைதி காக்க வேண்டும் என்று ஐ நா பொதுச்செயலாளர் திரு அன்டோனியோ குட்ரஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

வரும் பிப்ரவரி மாத்தில் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், வன்முறையை தவிர்த்து அனைவரும் அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

பங்களாதேஷ் போராட்டத்தில் ஈடுபட்ட **Sharif Osman Bin Hadi** கொல்லப்பட்டதற்கு ஐ நா தலைவர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவரது குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்த அவர், சர்வதேச மனித உரிமை நெறிமுறைகளின் அடிப்படையில் இதுதொடர்பாக விசாரணை நடத்த வேண்டும் என்று பங்களாதேஷ் அரசை திரு அன்டோனியோ குட்ரஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<>>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்க மசோதா, விவசாயிகளுக்கு மட்டுமின்றி ஊரக பகுதி மக்களுக்கும் பயனுள்ளதாக அமையும் என்று மத்திய அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் சௌத்ரி சரண் சிங் விருதுகளை இன்று வழங்கி பேசிய அவர், நாட்டில் உள்ள அனைத்து கிராமங்களின் மேம்பாட்டிற்கு இந்த இயக்கம் வழிவகை செய்யும் என்று கூறினார்.

வரும் நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட்டில் வேளாண் துறையில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் குறித்து ஆலோசனைகளை வரவேற்பதாக திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

<<<<<>>>>>>>

வெளிநாடுகளுக்கு சென்று இந்தியாவிற்கு எதிராக காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தி பேசி வருவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய பிஜேபி செய்தித்தொடர்பாளர் திரு கௌரவ் பாட்டியா, இந்தியாவிற்கு எதிராக செயல்படுபவர்களுடன் திரு ராகுல்காந்தி கலந்துரையாடியதாக தெரிவித்தார்.

நாடாளுமன்ற கூட்டத்தொடர் நிறைவடையும் முன்பே திரு ராகுல்காந்தி வெளிநாட்டுக்கு சென்று இந்தியாவுக்கு எதிராக பேசும் நபர்களை சந்தித்ததாக அவர் குறை கூறினார்.

தேச நலனுக்கும், நாட்டின் அரசியல் சாசன அமைப்புக்கும் எதிராக திரு ராகுல்காந்தி தொடர்ந்து பேசி வருவதை திரு கௌரவ் பாட்டியா சுட்டிக்காட்டினார்.

<<<<<>>>>>>>

அமெரிக்க விண்வெளி முகமை நாசா செவ்வாய் கிரகத்தை ஆய்வு செய்ய அனுப்பிய **Maven** விண்கலத்தில் இருந்து தகவல் தொடர்பு கடந்த இரண்டு வாரங்களாக கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**2014**-ஆம் ஆண்டு முதல், அதன் புவிவட்டப் பாதையில் செயல்பட்டு வந்த இந்த விண்கலம், எந்தவொரு தரவுகளையும், சமிக்ஞைகளையும் அனுப்பவில்லை.

தகவல் அனுப்பும் கருவிகள் திசை மாறி திரும்பியிருக்கக் கூடும் என்றும் சந்தேகிக்கப்படுகிறது.

இதுகுறித்து நாசா தொடர்ந்து ஆய்வு செய்து வருகிறது.

<<<<<>>>>>>>

நாடாளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்க மசோதா குறித்த சிறப்பு கலந்துரையாடல்

நிகழ்ச்சி ஆகாஷ்வாணியின் பிரதான அலைவரிசையில் இன்றிரவு எட்டரை மணிக்கு ஒலிபரப்பாகிறது.

''பெயர் அளவில் மாற்றமா — பெரிய மாற்றமா'' என்ற தலைப்பில் இடம்பெறும் இந்த நேர்முக நிகழ்ச்சியில் மூத்த பத்திரிகையாளரும். எழுத்தாளருமான பத்மன் என்கிற திரு நா. அனந்த பத்மநாபன் பற்கேற்கிறார்.

அவருடன் உரையாடுகிறார் நிகழ்ச்சி பிரிவு தலைவர் திரு ராமசாமி சுதர்சன்.

இந்த நிகழ்ச்சி நாளை காலை மணி **8.45-**க்கு ரெயின்போ பண்பலையிலும் ஒலிபரப்பாகிறது.

<<<<<>>>>>>

***விளையாட்டுச் செய்திகள்***

பங்களாதேஷ் சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Meiraba Luwang** பட்டம் வென்றார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், **21-7, 21-12** என்ற செட் கணக்கில், சகநாட்டு வீரர் **Numair Shaik-**ஐ வென்றார்.

---------------

உலகக்கோப்பை டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

சூரியகுமார் யாதவ் தலைமையிலான இந்திய அணியில், ஹர்திக் பாண்டியா, அக்ஷர் பட்டேல், பும்ரா, சஞ்ஜு சாம்சன் உள்ளிட்ட 15 வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

உலக்கோப்பை டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டி அடுத்த ஆண்டு பிப்ரவரி 7-ஆம் தேதி முதல், மார்ச் 8-ஆம் தேதிவரை இந்தியாவிலும், இலங்கையிலும் நடைபெறவுள்ளது.

---------------

சீனாவில் நடைபெற்றுவரும் உலக பேட்மிண்டன் இறுதிச்சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் — சிராக் ஷெட்டி இணை இன்று சீனாவின் Keng Liang — Chang Wang இணையை எதிர்கொள்கிறது.

<<<<<END>>>>>